<u>O.S.No.</u> 178/2016
27.11.2019

<u>பி.வா.சா.2.திரு.அய்யாவு.த.பெ.அழகப்பக்கோனார்</u>

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

வாதி எனது தம்பி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எனது தங்கை என்றால் சரிதான். என் குடும்பத்தில் நான் தான் மூத்த நபர் என்றால் சரிதான். எனக்கு அடுத்தது என் தங்கை 2ம் பிரதிவாதி தான் என்றால் சரிதான். வாதி தான் எங்கள் குடும்பத்தில் கடைகுட்டி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு 1981ம் ஆண்டு திருமணம் நடந்தது என்றால் சரிதான். அந்த திருமணத்தை நானும் என் அப்பாவும் சேர்ந்து நடத்தினோம் என்றால், என் அப்பாதான் திருமணத்தை நடத்தினார். அந்த திருமண செலவுகள் அனைத்தும் கூட்டுக்குடும்ப வருமானத்தில் இருந்து தான் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு 1982ல் திருமணம் நடந்தது என்றால் சரிதான் என்று சாட்சி கூறிவிட்டு, தற்போது ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். நான் எனது தங்கையான 2ம் பிரதிவாதியின் நாத்தனாரைதான் திருமணம் செய்தேன் என்றால் சரிதான். நாங்கள் பெண் கொடுத்து பெண் எடுத்தோம் என்றால் சரிதான். எனது திருமணத்தையும் எனது தங்கை திருமணத்தையும் என் அப்பா கூட்டுக்குடும்ப வருமானத்தில் தான் நடத்தினார் என்றால் சரிதான். 1982 வருடத்திற்கு முன்பே எனக்கு திருமணம் நடந்தது என்றால் சரிதான், அது முதல் திருமணம். முதல் மனைவி என்னுடன் வாழாமல் சென்றதால் நான் 2வது திருமணம் செய்து கொண்டன் என்றால் சரிதான். என் அம்மா இறந்தவுடன் நான் முதல் திருமணம் செய்தேன் என்றால் சரிதான். அந்த திருமணத்தையும் என் தந்தை தான் கூட்டுக்குடும்ப வருமானத்தில் இருந்து தான் செய்தார் என்றால் சரிதான். எனக்கு முதல் திருமணம் நடந்த போது என் தங்கை மற்றும் என் தம்பி ஆகியோர் இளவர்கள் தான் என்றால் சரிதான். என் முதல் திருமணம் நடந்ததுக்கு பின்பு நான், என் அப்பா, என் தங்கை ஆகிய அனைவரும் கூட்டுக்குடும்பமாக இருந்தோம் என்றால் சரியல்ல, எனக்கு முதல் திருமணம் நடந்த போது நாங்கள் அனைவரும் ஒன்றாகத்தான் இருந்தோம், 2வது திருமணத்திற்கு பின்பு என் அப்பா என்னை தனிக்குடித்தனத்திற்கு அனுப்பி வைத்தார். 2வது திருமணத்திற்கு பின்பும் என் அப்பா என்னை தனிக்குடித்தனம் செய்ய அனுப்பவில்லை என்றாலும் நாங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்தேர் என்றாலும் சரியல்ல. நான் 2வது திருமணத்திற்கு பின்பு தனிக்குடித்தனம் சென்றதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியாக ஞாபகமில்லை. அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், ஞாபகமில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் 2வது திருமணம் செய்து சில நாட்களில் என் தந்தைக்கு உடல் நிலை சரியில்லாமல் போனது என்றால் சரிதான். என் தந்தையை நான் தான் வைத்தியம் பார்த்து பாதுகாத்து வந்தேன் என்றால் சரிதான். எனக்கு 2வது திருமணம் ஆகிய போது வாதிக்கு 12 வயது என்றால் சரியல்ல, 15 வயதிற்கு மேல் இருக்கும். நான் அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பாவுடன் என் தம்பியும் உடன் இருந்தார் என்றால் என் அப்பா நடக்க இயலாமல் இருந்ததால் என் தம்பி பார்த்துக் கொண்டார். அவ்வாறு இல்லை என்றால் சரியல்ல. என் அப்பா தனது இறப்பு

O.S.No. 178/2016. 27.11.2019

பி.வா.சா.2.திரு.அய்யாவு.த.பெ.அழகப்பக்கோனார்

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வரைக்கும் என்னுடன் தான் இருந்தார் என்றால் சரியல்ல, நாங்கள் தனியாக இருந்தோம், அவர் தனியாக இருந்தார். எனது 2 வது திருமணத்திற்கு பிறகு என் அப்பாவிற்கு உடல் நிலை சரியில்லாமல் போனதால், சிகிச்சை கொடுக்கும் போது அவரது இடது கால் வெட்டி எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதிலிருந்து அவர் 2 மாதத்தில் அவர் வாய் பேச இயலாமல் போனது என்றால் சரிதான். அந்த நிலையில் அவரை பாதுகாத்தது நான் தான் என்றால் சரிதான். அவர் 1986 ல் இறந்தார் என்றால் சரிதான். அவர் 1986 ல் இறக்கும் போது வாதி மைனர் என்றால் அவருக்கு 16 வயது இருக்கும். அவரும் என் தந்தையுடன் தான் இருந்தார் என்றால் சரிதான். நாங்கள் எல்லாரும் எங்கள் தகப்பனாரும் ஒரே வீட்டில் இருந்தோம் என்றால் சரியல்ல, நாங்கள் தனித்தனி பகுதிகளில் குடியிருந்தோம். ஒரே வீட்டில் தான் தனியாக இருந்தோம் என்றால் வீடு பிரிக்கப்பட்டு தனித்தனியாக இருந்தோம். என் தந்தை உயிருடன் இருக்கும் போது பல சொத்துக்களை வாங்கினார் என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் அனைத்தும் அவர் பெயரில் பட்டா எண் 318 ல் இருந்தது என்றால் அவர் வாங்கிய சொத்துக்கள் அனைத்தும் அவர் பெயரில் தான் இருந்தன, ஆனால் பட்டா எண் தெரியாது. (வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க பி.வா.சா.2 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)